மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 150/2009

பெயர் : லட்சுமி
சாட்சி – வா.சா–1 நாள்: 19.09.2025

---

குறுக்கு விசாரணை (5, 23, 24 பிரதிவாதிகள் தரப்பு)

1. நான் கோவை நிர்மலா கல்லூரியில் பியுசி வரை படித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்தினை நான் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தாவா இரண்டாவது ஐட்டம் சொத்திற்கு உண்டான புகைப்படங்கள் என்றால் சரிதான். (**தாவா 2வது அயிட்ட சொத்திற்கான புகைப்படங்கள் குறுந்தகடுடன் பி.வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் படித்த காலத்தில் பதினொன்றாம் வகுப்பு பொதுத்தேர்வு என்றும், அதன் பின்னிட்டு பியுசி படிப்பதற்கு கல்லூரி செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

2. பதினொன்றாம் வகுப்பு மாற்றுச் சான்றிதழ், பொதுத்தேர்வு மதிப்பெண் பட்டியலில் எனது கையொப்பங்கள் இருக்கும் என்றால் சரிதான். எனது பதினொன்றாம் வகுப்பு மாற்றுச் சான்றிதழ் மற்றும் மதிப்பெண் பட்டியல் ஆகியவற்றை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் தேடிப் பார்க்க வேண்டும் இருந்தால் தாக்கல் செய்கிறேன். எனது சகோதரி வள்ளியம்மாளின் கணவர் பெயர் என்ன என்று எனக்கு நினைவில் இல்லை. வள்ளியம்மாளுக்கு பேபி மற்றும் நவமணி என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள். பேபி என்ன படித்துள்ளார் என்றால் அவர் பட்டப் படிப்பு படித்துள்ளார். நவமணி பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார்.

3. பேபி தற்போது ஆசிரியராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். வள்ளியம்மாள் தனது கணவரை பிரிந்து 5ம் பிரதிவாதி வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல எனது அம்மா வீட்டில் தான் வசித்தார். 5ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் எனது குடும்பத்தில் கடைசி மகன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் வள்ளியம்மாளின் மகள்கள் பேபி மற்றும் நவமணி ஆகியோர்களுக்கு திருமணம் செய்து வைத்த பின்னர் தான் அவர் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 5ம்

பிரதிவாதியின் திருமணத்திற்கு முன்பே எனது தாயார் இறந்து விட்டார் என்றால் சரிதான்.

4. 5ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் அவருக்கு திருமணம் ஆகும் வரை அவரது அம்மாவுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். எனக்கு வங்கியில் கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. எப்போது வங்கி கணக்கு தொடங்கினேன் என்றால் 2, 3 வருடங்களுக்கு முன்பு தொடங்கினேன். அதற்கு முன்பு எனக்கு வங்கி கணக்கு கிடையாது. தற்போது எனது பெயரில் சொத்துக்கள் வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் எந்த சொத்தும் கிடையாது. தாவா 2வது அயிட்ட சொத்தின் நான்கு எல்லைகள் என்னவென்று எனக்கு தெரியாது.

5. எனக்கு 1981 ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. வள்ளியம்மாளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று நினைவில் இல்லை எனது திருமணத்திற்கு 2, 3 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. எனது அம்மாவை ஏமாற்றி உயில் மற்றும் 2 செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதி வாங்கியுள்ளார்கள் என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எந்த வகையில் ஏமாற்றினார்கள் என்றால் எனது அம்மா 15 ஆண்டுகள் உடல்நிலை சரியில்லாமல் காசநோய் காரணமாக சில சமயங்களில் நினைவு கூட இல்லாமல் இருந்தார்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்வதாக அழைத்துச் சென்ற சமயத்தில் எழுதி வாங்கி உள்ளார்கள்.

6. 15 ஆண்டுகள் எனது அம்மா காச நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்று நான் எனது வழக்குரையில் சொல்லி உள்ளேனா என்றால் உடல்நிலை சரியில்லை என்று மட்டும் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், எனது வழக்குரையில் எனது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று கூட நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் ஊரில் பொன்னுசாமி என்ற பெயரில் கர்ணம் இருந்தார் என்றால் எனக்கு நினைவில் இல்லை.

7. எனது பெற்றோர்களுக்கு ராசா கவுண்டர் மகன் பழனிச்சாமி என்ற குடும்பம் நண்பர் இருந்தார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. 5ம் பிரதிவாதி பெயருக்கு எனது அம்மா எழுதி வைத்துள்ள உயிலானது பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கான நகல்களை யார் எடுத்தார்கள் என்றால் நானும் எனது அக்காவும் எடுத்தோம். நகல்கள் எடுப்பதற்கு வில்லங்கச் சான்றிதழ் எடுத்துப் பார்த்தோமா என்றால் இல்லை.

8. வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆவணங்களின் எண்கள் எங்களுக்கு எவ்வாறு தெரியும் என்றால் 5ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் தான் வழக்கு தாக்கல் செய்வதற்காக ஆவணங்களை எடுத்துக் கொடுத்து விவரங்களை எங்களிடம் கொடுத்தார். வழக்கையும் அவர்தான் தாக்கல் செய்ய சொன்னார். தற்போது 16 வருடங்கள் கழித்து வழக்கை எதிர்த்து நடத்துகிறார். 5ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைக்கப்பட்ட உயில் ஆவணம் பற்றி எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. தாவா 2வது அயிட்ட சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 5ம் பிரதிவாதி பெயரில் உள்ளன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அம்மா இறந்த பின்னர் தாவா 2வது அயிட்ட சொத்தில் 5ம் பிரதிவாதி பழைய வீட்டினை சரி செய்து வீடு கட்டி உள்ளார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தான் மின் இணைப்பு, மற்றும் வரி இனங்களை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. யார் மின் கட்டணம் செலுத்தி வருகிறார்கள் என்றால் எல்லோரும் இருக்கிறார்கள் யார் செலுத்தி வருகிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

10. தாவா 2வது அயிட்ட சொத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்றால் 5ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன், சண்முகசுந்தரம் ஆகிய இருவர் மட்டும் உள்ளார்கள். எனது திருமணத்திற்கு முன்பு எனது கையொப்பத்தில் எஸ்.லட்சுமி என்று தான் போடுவேன் என்றால் சரிதான். எப்போது எம்.லட்சுமி என்று கையெழுத்து போட்டேன் என்றால் திருமணத்திற்கு பின்னர் போட்டேன். 03.12.1983 தேதியில் எனது தாயார் எழுதி வைத்த உயிலில் 3வது சாட்சியாக நான்தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த சாட்சி கையெழுத்தும் போடவில்லை.

11. நான் உயிலில் உடனிருந்து சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு தற்போது போடவில்லை என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்த தேதியிலேயே உயில் எழுதிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. உயில்படி 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 22 ஆம் பிரதிவாதி ரத்தினசாமி 2002 ஆம் ஆண்டு கிரயம் பெற்றுள்ளார் என்றால் எனது வழக்கறிஞர் சொல்லித்தான் தெரியும்.

12. தாவா சொத்தில் 22 ஆம் பிரதிவாதி வீடு மற்றும் தறிகுடோன் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. 22 ஆம் பிரதிவாதி கட்டியுள்ள வீட்டிற்கு வரி மற்றும் மின் இணைப்பு அவர் பெயரில் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அவர் கட்டியுள்ள தறி குடோன் 4000 சதுர அடி பரப்பளவுக்கும், ஆர்சிசி வீடு 1500 சதுர அடி பரப்பளவுக்கும் கட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2002 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கட்டப்பட்ட தறி குடோன் மற்றும் வீட்டிற்கு நான் ஆட்சேபனை எதுவும் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி தான் கட்டப்பட்டுள்ள விவரமே எனக்கு தெரியும்.

13. 22 ஆம் பிரதிவாதி மேற்படி கட்டிடங்கள் கட்டியது பற்றி எனக்கு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும் என்றும், நான் தற்போது தான் வழக்கறிஞர் சொல்லி தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 22 ஆம் பிரதிபாதி கிரயம் பெற்ற கிரைய ஆவணத்திலேயே மேற்படி உயில் சாசனத்தின் படி பாத்தியப்பட்ட சொத்தினை கிரயம் செய்து கொடுப்பதாக கண்டு எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், அதன் காரணமாகத்தான் நான் வீடு மற்றும் தறி குடோன் இருப்பதை மறைத்து சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கட்டிடங்களை மறைத்து சொத்து விவரத்தில் நான் குறிப்பிடாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் பகுதி பாகப்பிரிவினையால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14. ஐந்தாம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் அவரது திருமணத்தின்போது 1999 ஆம் ஆண்டில் 1000 சதுர அடி பரப்பளவிற்கு மாட்டுச் சாலையும், 2000 சதுர அடி பரப்பளவிற்கு வீடும் கட்டி உள்ளார் என்றால் சரியல்ல. அதே போன்று சுப்ரமணியம் 1000 சதுர அடியில் வீடும், 3000 சதுர அடியில் தறி குடோனும் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து ஆணையரை நியமித்து சொத்தினை பார்வையிட்டால் உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

15. பாலகிருஷ்ணன் மற்றும் ரத்தினசாமி ஆகியோர் ஆளுக்கு ஒரு போர்வெல் அமைத்துள்ளார்கள் என்றால் இருக்கலாம். அதற்கு மின் இணைப்பு பெற்று விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் விவசாயம் எதுவும் செய்யவில்லை. தற்போது என்ன பயிர் விளைவிக்கப்பட்டுள்ளது என்றால் எந்த பயிரும் இல்லை மாட்டிற்கு தீவனம் மட்டும் பயிரிடப்பட்டுள்ளது. எனது தாயார் இறந்த பின்னர் பாலகிருஷ்ணன் தான் தாவா சொத்தின் ஒரு பகுதியில் இருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

16. எனது சகோதரி வள்ளியம்மாளின் மகள்கள் நவமணி திருப்பூரிலும், பேபி பெருந்துறையிலும் உள்ளார்கள். மேற்படி இருவரும் அவர்களது திருமணத்திற்கு பின்னர் வள்ளியம்மாள் எங்கு வசித்து வந்தார் என்றால் அவரது மகள்கள் வீட்டில் மாறி மாறி இருந்தார். தாவா 2வது அயிட்ட சொத்தில் இருந்து வள்ளியம்மாளின் மகள்கள் வீடு 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் இருக்கலாம். நான் திருமணம் ஆன நாள் முதல் எனது கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன்.

17. தாவா 2வது அயிட்ட சொத்து எங்கள் தாயாரின் தந்தை பழனி கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்து என்றால் சரிதான். எங்கள் தாத்தா பழனி கவுண்டருக்கு எனது தாயாரையும் சேர்த்து 4 பெண் மக்கள் மட்டும் தான் வாரிசுகள் என்றும், ஆண் மக்கள் யாரும் வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். பழனி கவுண்டர் இறப்பிற்கு பின்னர் நான்கு பெண் மக்களும் அவர்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து தான் தாவா 2 வது அயிட்ட சொத்து என்றால் சரிதான்.

18. தாவா 2வது அயிட்ட சொத்து எனது தாத்தா வழியில் எனது தாயாருக்கு வந்ததால் அவரது தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தந்தை இறந்தபோது இறுதிச் சடங்கை எனது தாயார் தான் முன் நின்று செய்தார் என்றால் சரியல்ல ஆண் மக்கள் தான் செய்வார்கள். எனது தாயாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட தாவா 2 வது அயிட்ட சொத்தினை 03.12.1983 தேதியிட்ட உயில் ஆவணம் மூலமாக தனது மகன்களான 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் பெயருக்கு தனது சுய விருப்பத்தின் பேரில் எழுதி வைத்து பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

19. 5ம் பிரதிவாதிக்கு உயில் படி பாத்தியப்பட்ட சொத்தினை அவர் ஒரு பகுதியை 25 மற்றும் 26 ஆம் பிரதிவாதிகள் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி கிரயம் செய்து கொடுத்தது போக மீதம் இருந்த சொத்தினை தனது மனைவி மற்றும் மகளான 23 மற்றும் 24 ஆம் பிரதிவாதிகள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி தெரியும்.

20. தாவா 1வது அயிட்ட சொத்தினை 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தங்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களையும் மோசடியாக செய்து கொண்டுள்ளார்கள். அடுத்த வாய்தாவில் எனது

பதினொன்றாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. தேடிப் பார்த்து கிடைத்தால் தான் முடியும். எனது கையொப்பம் அடங்கிய 1983 ஆம் ஆண்டு காலகட்டத்திற்க்கு உண்டான ஆவணத்தையோ அல்லது 1983 ஆம் ஆண்டிற்கு முன்பு உள்ள ஆவணத்தையோ தாக்கல் செய்ய முடியுமா என்றால் கிடைத்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

21. 1983 ஆம் ஆண்டு எனது கையெழுத்தையும், உயில் ஆவணத்தில் சாட்சியாக செய்யப்பட்டுள்ள கையெழுத்தையும் ஒப்பீடு செய்தால் உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரிதான். 1983 ஆம் ஆண்டு எனது கையொப்பத்தையும், உயிலில் உள்ள சாட்சி கையெழுத்தையும் ஒப்பீடு செய்வதற்கு கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் உயிலில் உள்ள கையொப்பம் என்னுடையதா இல்லையா என்று தெரியவரும் என்றால் சரிதான்.

22. எனது தாயார் கைரேகை தான் வைப்பார் என்றால் சரிதான். உயிலில் கைரேகை தான் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயாரும், அவரது சகோதரிகளும் செய்து கொண்டுள்ள பாகப்பிரிவினை பத்திரத்தில் கைரேகை தான் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு உயிலில் ஒதுக்கப்பட்ட சொத்தினை அவர்கள் எனது அம்மா உயிருடன் இருக்கும்போதே செட்டில்மெண்ட் ஆவணமாக 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டிலேயே எனது அம்மா எழுதி வைத்துள்ளார் என்றால் அது மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் ஆகும்.

23. எந்த வகையில் மோசடியான ஆவணம் என்றால் எனது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது அழைத்துச் சென்று எழுதி வாங்கியுள்ளார்கள். எனது அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. எனது அம்மா எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்றால் ராமகிருஷ்ணா மருத்துவமனையில் 3 மாதங்கள் இறப்பதற்கு முன்பாக எடுத்தார்.

24. வேறு ஏதேனும் மருத்துவமனையில் அதற்கு முன்பு சிகிச்சை எடுத்தாரா என்றால் எடுத்துக்கொண்டார். வேறு எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்றால் சூலூர் அரசு மருத்துவமனை, பல்லடம் சஞ்சீவி மருத்துவமனை மற்றும் நாட்டு வைத்தியம் பார்த்தோம். மேற்படி மருத்துவமனைகளில் இருந்து ஆவணங்களை வரவைத்து தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. எனது அம்மா இறக்கும் வரை

நல்ல உடல் நிலையிலும் மன நிலையிலும் தான் இருந்தார் என்றும், நான் வழக்கிற்காக உடல்நிலை அவருக்கு சரி இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

25. நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக அனுப்பிய அறிவிப்பு மற்றும் வழக்குரை ஆகியவற்றில் எனது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று எந்த இடத்திலும் நாங்கள் சொல்லவில்லை என்றால் நான் பாகப்பிரிவினை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அதற்கு சொல்ல வேண்டிய தேவையில்லை என்று சொல்லவில்லை. எனது அம்மாவிற்கு உண்மையாகவே உடல்நிலை சரியில்லாமல் இருந்திருந்தால், நான் அதனை எனது அறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொல்லி இருப்பேன் என்றும், அவர் நல்ல நிலையில் இருந்ததால்தான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

26. தாவா 2வது அயிட்ட சொத்தினை பொருத்து எனது அம்மா உயில் ஆவணமும், செட்டில்மெண்ட் ஆவணங்களும், எழுதி வைத்து 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் அவர்களது தனிப்பட்ட சொத்தாக அனுபவித்து வந்துள்ளதால், மேற்படி சொத்தில் பாகம் கேட்க எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்து முழுவதும் பாகப்பிரிவினையில் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் மேற்படி சொத்து சம்பந்தமாக பாகம் கோருவதற்கு எங்களுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

27. இந்த வழக்கில் செட்டில்மெண்ட் ஆவணங்களையும், உயில் ஆவணத்தையும், ரத்து செய்வதற்கு நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் அதனை எனது வழக்கறிஞர் பார்த்துக் கொள்வார். தாவா சொத்துக்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பாகம் பிரித்துக் கொண்டுள்ளதாலும், உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளதாலும், செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளதாலும், அவை நடைமுறைக்கு வந்து விட்டதாலும், தாவா சொத்துக்களை பொறுத்து பாகம் கோருவதற்கு எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

28. 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எனது தாயார் உயிருடன் இருந்தபோது திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி இருவருக்கும் திருமணம்

நடைபெற்றதால் தான் எனது தாயார் உயில் எழுதி வைத்திருந்தாலும், செட்டில்மெண்ட் ஆவணத்தை இருவருக்கும் எழுதிக் கொடுத்தார் என்றும் அதில் அவர்கள் இருவரும் வீடு கட்டி குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. உயில் எழுதிய தேதியிலேயே எனக்கு உயில் எழுதப்பட்ட விவரம் நன்கு தெரியும் என்றும், அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றும், இருந்தும் அதனை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றும் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.09.19 19:40:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.